அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்:27/2016
தேதி :27/01/2016

# சம.க.நிர்வாகிகள் நீக்கம்
# சம.க.நிறுவனர் தலைவர்
# ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிக்கை.

சமத்துவ மக்கள் கட்சியில் பொதுச் செயலாளர் பொறுப்பு வகித்து வந்த கரு.நாகராஜன் மற்றும் சிலர் பாரதிய ஜனதா கட்சியில் இன்று இணைந்ததாக செய்திகள் வந்துள்ளன. ஒரு கட்சியில் இருந்து மற்ற கட்சிக்கு மாறுவது என்பது அவரவர் தனிப்பட்ட உரிமையும் விருப்பமும் ஆகும்.

அதே வேளை கட்சியிலிருந்து ஏற்கெனவே நீக்கப்பட்ட ஜெமிலா, ராஜசேகர், ஷிமோன் கிரீஸ் அதே பொறுப்பில் இருந்து விலகியதாக சொல்லப்படுவது உண்மைக்குப் புறம்பான செய்தி.

எனவே பொதுச் செயலாளர் பதவியிலிருந்த கரு.நாகராஜன், தலைமை நிலையச் செயலாளர் பதவியிலிருந்த ஐஸ் அவுஸ் தியாகு, மாவட்டச் செயலாளர்கள் பொறுப்பிலிருந்த ராஜா, பிரசாத் உள்ளிட்டவர்கள் தத்தம் பொறுப்பிலிருந்தும், அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்தும் நீக்கப்படுகிறார்கள்.

மேலும் கட்சி விதிமுறைகளை மதிக்காமல் நடந்ததோடு, அதைப் பலமுறை சுட்டிக் காட்டியும் சிறிதும் பொருட்படுத்தாமல் தன்னிச்சையாக செயல்பட்டு கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த துணைத் தலைவர் எர்ணாவூர் ஏ.நாராயணன் எம்.எல்.ஏ அப்பொறுப்பிலிருந்தும் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்தும் விடுவிக்கப்படுகிறார். மேற்சொன்ன அனைவரோடும் இயக்கத் தோழர்கள் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இன்று கட்சியிலிருந்து சிலர் விலகியதை அறிந்து, அதை ஒரு பாதிப்பாகக் கருதாமல், என் மீது முழு நம்பிக்கையும், இயக்கத்திற்கு முழு ஆதரவையும் தெரிவித்து பல்லாயிரக்கணக்கான சமத்துவ சொந்தங்கள் நேரிலும், தொலைபேசி வாயிலாகவும் தங்களது உணர்வை வெளிப்படுத்தியுள்ளார்கள். அதோடு வருங்காலத்தில் இன்னும் முழு வேகத்தோடும், எழுச்சியோடும் பணியாற்றுவோம் என்ற உறுதியையும் தெரிவித்துள்ளார்கள்.

சமத்துவ மக்கள் என்னும் ஒரு விருட்சத்திலிருந்து சருகுகள் சில உதிர்ந்தாலும், அதன் ஆணி வேராக தொண்டர்களும், மாவட்டச் செயலாளர்களும், கட்டுப்பாட்டுடன் கூடிய ஒற்றுமை உணர்வை வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பது எனக்கு மகிழ்ச்சியையும் நெகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

அதன் அடிப்படையில் நாளை 28/01/2016 சென்னை தலைமை அலுவலகத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள், தொகுதிச் செயலாளர்கள் உள்ளடங்கிய அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது. சட்டமன்ற பொதுத் தேர்தல் குறித்தும், கட்சி வளர்ச்சிப் பணிகள் குறித்தும் அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட உள்ளன.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்



ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்